மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், கோவில்பட்டி

அ.வ.எண்.55 /2015

வாதி தரப்பு சாட்சி வாக்குமூலம் வா.சா.2.

---

பெயர். - திரு.செல்லத்துரை

த/பெ. - திரு.மாரியப்பன்

கிராமம் - திருமங்கலக்குறிச்சி

தொழில் - விவசாயம், ரியல்எஸ்டேட்

தாலுகா - கயத்தார்

வயது - 40.

1872-ஆம் ஆண்டு இந்திய சாட்சிய சட்டத்தின்படி 2025-ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 17-ஆம் நாள் இந்நீதிமன்ற உதவியாளரால் சத்தியப்பிரமாண வாக்குமூலம் செய்யப்பட்டு, நிருபண வாக்குமூலம் தாக்கல் செய்யப்பட்டு, ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

முதல் விசாரணை.-

1) நான் இந்த வழக்கில் 3ம்வாதி ஆவேன். எனது தரப்பு சாட்சியத்தை நிருபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும். அதை வாதிகள் தரப்பில் ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன்.

| | |
|---|---|
| 1 | 21.03.2012ம் தேதியிட்ட 1ம்வாதி பெயரில் உள்ள கிரையம் சப்ரி நகல் வா.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது. |
| 2 | 21.03.2012ம் தேதியிட்ட 2ம்வாதி பெயரில் உள்ள கிரையம் சப்ரி நகல் வா.சா.ஆ.10 ஆக குறியீடு செய்யப்படுகிறது. |
| 3 | 21.03.2012ம் தேதியிட்ட 3 மற்றும் 5ம் வாதி பெயரில் உள்ள கிரையம் சப்ரி நகல் வா.சா.ஆ.11 ஆக குறியீடு செய்யப்படுகிறது. |
| 4 | 21.03.2012ம் தேதியிட்ட 3 மற்றும் 5ம்வாதி பெயரில் உள்ள கிரையம் சப்ரி நகல் வா.சா.ஆ.12 ஆக குறியீடு செய்யப்படுகிறது. |
| 5 | 21.03.2012ம் தேதியிட்ட 6ம்வாதி பெயரில் உள்ள கிரையம் சப்ரி நகல் வா.சா.ஆ.13 ஆக குறியீடு செய்யப்படுகிறது. |
| 6 | 1ம் தபசில் சொத்தில கட்டப்பட்டுள்ள கதவு எண்.2/388-A வீட்டிற்கான தீர்வை ரசீது அசல் எண்ணம் 1 வா.சா.ஆ.14 ஆக குறியீடு செய்யப்படுகிறது. |
| 7 | 3ம்தபசில் சொத்தில கட்டப்பட்டுள்ள கதவு எண்.2/388,2.389 வீடுகளுக்கான தீர்வை ரசீதுகள் எண்ணம் 2 அசல் வா.சா.ஆ.15 ஆக குறியீடு செய்யப்படுகிறது. |
| 8 | இவ்வியாஜ்ஜிய 6ம் தபசில் சொத்தினையும் உள்ளடக்கி மோசடியாக 5ம்பிரதிவாதிக்கு 1 முதல் 4 பிரதிவாதிகள் எழுதிக்கொடுத்துள்ள கிரையம் சப்ரி நகல் வா.சா.ஆ.16 ஆக குறியீடு செய்யப்படுகிறது. |

பிராதுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

குறுக்கு விசாரணை - வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க வேறு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்தை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு

சாட்சிக்கு வாசித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒப்பம்)C.கருப்பசாமி,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
கோவில்பட்டி,
17.10.2025.